# இயல் 4 கலங்கரை விளக்கம்

1. கலங்கரை விளக்கத்தின் தோற்றம் மற்றும் செயலைக் குறிப்பிடு.
   - கலங்கரை விளக்கமானது வானத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் தூண் போலத் தோற்றமளிக்கிறது.
   - ஏறமுடியாத உயரத்தைக் கொண்டிருக்கிறது;
   - விண்ணை முட்டும் மாடத்தை உடையது.
   - மாடத்தில் இரவில் ஏற்றப்பட்ட எரியும் விளக்கு, கடலில் கரை அறியாமல் கலங்கும் மரக்கலங்களைத் தன் துறை நோக்கி அழைக்கிறது.
   - 
2. கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பு வரைக.
   - சங்ககாலப் புலவர்.
   - கடியலூர் என்ற ஊரில் வாழ்ந்தவர்.
   - பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.
3. ஆற்றுப்படை இலக்கியம் - குறிப்பு வரைக.

   வள்ளல் ஒருவரிடம் பரிசு பெற்றுத் திரும்பும் புலவர், பாணர் போன்றோர் அந்த வள்ளலிடம் சென்று பரிசு பெற, பிறருக்கு வழிகாட்டுவதாகப் பாடப்படுவது ஆற்றுப்படை இலக்கியம் ஆகும்.
4. பத்துப்பாட்டு நூல்கள் பெயரைக் குறிப்பிடுக.
   - திருமுருகாற்றுப்படை
   - பொருநராற்றுப்படை
   - மதுரைக்காஞ்சி
   - நெடுநல்வாடை
   - பெரும்பாணாற்றுப்படை
   - சிறுபாணாற்றுப்படை
   - குறிஞ்சிப்பாட்டு
   - பட்டினப்பாலை
   - முல்லைப்பாட்டு
   - மலைபடுகடாம்